### சென்னை கலைவாணர் அரங்கில் இன்று விழா! நூற்றாண்டு விழாவை முன்னிட்டு – முத்தமிழறிஞர்

# கலைஞர் மு.கருணாநிதி நினைவு 100 ரூபாய் நாணயம்!

## ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெற்றுக் கொள்கிறார்!

**சென்னை, ஆக. 18 -**

**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ‘டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி’ ரூ.100 நினைவு நாணயம் வெளியீட்டு விழா முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (18ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது.**

**இவ்விழாவில் ஒன்றிய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கலைஞர் நூற்றாண்டு நினைவு ரூ.100 நாணயத்தை வெளியிட, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.**

**இதுபற்றிய விவரம் வருமாறு:-**




தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாணயத்திற்கு ஒன்றிய நிதியமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

இதைத்தொடர்ந்து, இன்று (ஆக. 18ம் தேதி) சென்னையில் நடைபெறும் விழாவில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 5 முறை முதல்வராகவும், 13 முறை சட்டப்பேரவை மற்றும் மேலவை உறுப்பினராகவும் இருந்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கடந்த 2023ம் ஆண்டு ஜூன் 3ம் தேதி முதல் ஓர் ஆண்டுக்கு கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

இதை முன்னிட்டு தமிழக அரசின் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ‘நினைவு நாணயம்’ வெளியிட ஒன்றிய அரசுக்கு கடந்தாண்டு ஜூலை 23ம் தேதி கடிதம் எழுதினார். இந்த நாணயத்தை, கடந்த ஜூன் 3ம் தேதி தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்த நாளில் வெளியிட திட்டமிடப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களால் இந்த நாணயம் குறிப்பிட்ட தேதியில் வெளியிட முடியாமல் இருந்தது. நாணயத்திற்கான நடைமுறை பணிகள் முடிவடையாததே இதற்கு காரணம் என்று கூறப்பட்டது.

தற்போது இவை அனைத்தும் முடிந்து கடந்த மாதம் நாணயம் வெளியிடுவதற்கான அனுமதி கடிதத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கையெழுத்திட்டுள்ளார்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் ரூ.100 நினைவு நாணயம், அதன் அமைப்பு, உள்ளடக்கம் விலை ஆகியவை முடிவு செய்யப்பட்டது. இதன்படி இந்த நாணயத்தை அச்சிடுவதற்கு கடந்த ஜூலை 12-ம் தேதி மத்திய அரசிதழிலும் வெளியிடப்பட்டது.

இதைத்தொடர்ந்து கலைஞரின் நினைவு நாணயத்திற்கான மாதிரி வரைபடம் தமிழக அரசிடம் இருந்து பெறப்பட்டது. இதை வடிவமைக்கும் பணியை ஒன்றிய நிதியமைச்சகம் செய்து வந்தது. நாணயத்தை, ஒன்றிய நிதி அமைச்சகத்தின் உத்தரவின்படி இந்திய ரிசர்வ் வங்கி அச்சடித்து வெளியிடுகிறது.

இந்தி மற்றும் ஆங்கிலத்தில் ‘டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி’ என்ற பெயருடன், ‘தமிழ் வெல்லும்’ என்ற தமிழ் வாசகம் அவரது நினைவு நாணயத்தில் இடம் பெற உள்ளது. தற்போது தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நாணயம் வெளியிடுவதற்கான நிகழ்ச்சியை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் ஏற்பாட்டின் பேரில் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி இன்று (18ம் தேதி) சென்னை, கலைவாணர் அரங்கில் விழா நடைபெறுகிறது. ஒன்றிய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, கலைஞரின் 100 ரூபாய் நாணயத்தை வெளியிட உள்ளார். முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கலைஞரின் நாணயத்தை பெற்றுக் கொள்கிறார்.

விழாவில், அமைச்சர்கள், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கிறார்கள்.

---

### தொழில் வளர்ச்சிக்காக பல சிறப்புத் திட்டங்களைத் தொடங்கி செயல்படுத்தி வருகிறோம்!

# தெற்காசியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம்!

## திருப்பெரும்புதூரில் பெண் பணியாளர்களுக்கு சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**திருப்பெரும்புதூர், ஆக. 18 -**

**திருப்பெரும்புதூரில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை திறந்து வைத்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திராவிட மாடல் அரசு தொழில் வளர்ச்சிக்காக பல சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது எனவும், தெற்காசியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதே நம் இலட்சியம் எனவும் குறிப்பிட்டார்.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.08.2024) இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் – வடகால் கிராமத்தில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்காக 706.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 18,720 படுக்கைகள் கொண்ட சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யாங் லீயு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், இந்தியாவிற்கான தைவான் நாட்டு தூதர் பௌஷன் ஹேர், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. கி.செந்தில்ராஜ், மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவிலேயே முதன் முறையாக காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் வடகால் கிராமத்தில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர் களுக்காக 706.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2024) திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு :-

உலகளாவிய நிறுவனமாக இருந்தாலும் ஃபாக்ஸ்கான் குழுமத்தின் சிறப்பான இந்தியச் செயல்பாடுகளுக்காக அதன் தலைவர் யாங் லீயு அவர்களுக்கு ‘பத்ம பூஷன்’ விருது வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக, யாங் லீயு அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் இன்னும் பல சிறப்புகளை, பெருமைகளை பெற வேண்டும் அதற்காக வாழ்த்துகிறேன்.

**உலகத்திலேயே மிகப்பெரிய மின்னணுவியல் நிறுவனம்!**

தைவான் நாட்டைச் சேர்ந்த ஃபாக்ஸ்கான், உலகத்திலேயே மிகப்பெரிய மின்னணு வியல் உற்பத்தி நிறுவனம். உலகளவில் புகழ்பெற்ற ஆப்பிள் நிறுவனத்தின் ஐபோன் களுக்கான உதிரி பாகங்களை பொருத்தி ஒருங்கிணைக்கும் நிறுவனம் இது.

12 நாடுகளில் தன்னுடைய உற்பத்தி நிறுவனங்களை அமைத்திருக்கிறது. இந்தக் குழுமம் தமிழ்நாட்டில் திருப்பெரும்புதூரில் இரண்டு உற்பத்தி அலகுகளை நிறுவி இருப்பது நமக்கு கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமை. இதற்காக ஃபாக்ஸ்கான் நிறுவனத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில் 41 ஆயிரம் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் அதில் 35 ஆயிரம் பேர் பெண்கள். ஆணுக்கு பெண் சமம் என்பதை தாண்டி ஆண்களைவிட, கூடுதலான பெண் தொழிலாளர்கள் இருப்பதை பெண் எனும் பேராற்றலுக்குத் தரும் முக்கியத்துவமாகவே பார்க்கிறேன்.

**தமிழ்நாட்டில்தான் தொழிற்சாலைகளில் பணி புரியும் பெண்கள் எண்ணிக்கை அதிகம்!**

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்தையும்விட, தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில்தான் அதிகமாக இருக்கிறது. அதாவது 42 விழுக்காடு என்ற அளவில் இருக்கிறது. அந்த வகையில், உங்கள் நிறுவனத்தின் சமத்துவ நோக்கத்தை பாராட்டுகிறேன். பெண்களின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு எத்தனையோ திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

எடுத்துக்காட்டாக, குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’, கல்லூரி மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘புதுமைப் பெண் திட்டம்’, அது மட்டுமல்லாமல், இன்னும் பல புதுமையான திட்டங்களை பெண்களுக்காக நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது. பணிக்கு செல்லும் தாய்மார்களின் நலன் கருதி, சிப்காட் தொழிற்பூங்காக்களில் உள்ள தொழிற் சாலைகளில் ஏற்கனவே 63 குழந்தைகள் காப்பகம் செயல்பட்டு வருகிறது. மேலும், சிப்காட் நிறுவனம் நேரடியாக குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்த முடிவெடுத்து இருக்கிறது.

பெண்களை தொழில் முனைவோராக உருவாக்க, இளம் வயதிலேயே அதை ஊக்குவிக்கும் வகையில், அரசுப் பள்ளிகளில் 8 முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்காக, உலக வங்கி உதவியோடு தமிழ்நாடு அரசு “WE SAFE” திட்டத்தை தொடங்கி, பயிற்சி அளித்துக் கொண்டு வருகிறது.

நம்முடைய திராவிட மாடல் அரசு 2021 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதும் தமிழ்நாட்டை இந்தியாவில் மட்டுமல்லாமல், தெற்கு ஆசியாவிலேயே முன்னணி மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று இலட்சிய இலக்கை கொண்டு செயல்பட்டு வருகிறது. அதில் வெற்றியும் பெற்று வருகிறோம்.

**சுற்றுச்சூழல் - வறுமை ஒழிப்பு முதலிடம் வகிக்கும் தமிழ்நாடு!**

நிதி ஆயோக் அமைப்பின் 20232024 ஆம் ஆண்டுக்கான அறிக்கையின்படி, வறுமை ஒழிப்பு, சுற்றுச்சூழல் பராமரிப்பு, குறைந்த செலவில் மாசில்லா எரிசக்தி ஆகிய குறியீடுகளில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பெற்றிருக்கிறது. பத்து குறியீடுகளில் முன்னிலை வகிக்கிறது. மொத்தம் 13 குறியீடுகளில் தமிழ்நாடு 11ல் தேசிய சராசரியைவிட அதிக புள்ளிகள் பெற்றிருக்கிறது.

2023-2024ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.19 விழுக்காடு பங்களிப்போடு தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலம் என்ற நிலையை தக்க வைத்துக் கொண்டிருக்கிறது என்று இங்கு குறிப்பிடுவது அவசியம் என்று நினைக்கிறேன்.

**2023 - 2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.19 விழுக்காடு பங்களிப்போடு தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொரு ளாதார மாநிலம் என்ற நிலையை தக்க வைத்துக் கொண்டி ருக்கிறது என்று இங்கு குறிப்பிடுவது அவசியம் என்று நினைக்கிறேன். இந்தியா விலேயே பன்முகத்தன்மை யோடு தொழில் துறைக்கு சாதகமான எல்லா அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.**

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்